தண்ணீர் தரயிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவை களை கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த நிதி ஆண்டு அந்த மடிச்சல் கால்வாயை வெட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரள அரசோடு தொடர்பு கொண்ட அந்தக் கடிதத்தின் நகலை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து உடனடியாக பரிசீலித்து, 15 நாட்களுக்குள் தகவல் கொடுக்க வேண்டு மென்று கேட்டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு, இதிலே விரைவான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தத் திட்டம் வருமென்று எதிர்பார்த்து ஏமாந்ததற்குக் காரணம், இவ்வளவு காலதாமதம் ஆனதுதான். இது இரண்டு மாநிலங்களுடைய தொடர்புடைய தாக இருப்பதால், மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் — மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இது இரண்டு மாநிலங்கள் தொடர்புடைய காரணத்தினாலே மத்திய அரசு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட வேண்டுமென்று நமது மாநில அரசாங்கம் கேட்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, இரண்டு மாநிலங்களின் பிரச்சினை என்பதற்காக, மத்திய அரசிடம் கேட்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கணவன்-மனைவி சண்டை ஏற்பட்டால், தேவைப்படுகின்றபோது, மாமி யார் வரலாமே தவிர, ஒவ்வொரு விஷயத்திற்கும் மாமியார் வரக்கூடாது. இரண்டு மாநிலங்களுக்கிடையே நல்லமுறை யிலே பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது. அது முடிந்து விடுமென்ற நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை வெற்றி பெறுமென்று நாம் நம்புவோமாக.

கோமுகி அணையில் தூர் எடுக்கும் பணி

*வினா எண். 557— திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோமுகி அணை தூர்ந்துபோய் தண்ணீர் கொள்ளளவு குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் தூர் எடுக்கும் டணி விரைவில் துவக்கப் படுமா?

[1981 மார்ச் 30

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) மற்றும் (ஆ) 1966 ஆம் ஆண்டிலிருந்து கோமுகி நீர்த் தேக்கம் செயல்பட்டு வருவதால், ஓரளவுதூர்ந்து போயிருக்கலாம். எவ்வளவு தூர்ந்து போயிருக்கிறது என்பதை அறிய தூர் அள வெடுப்பு (Silt Survey) செய்யப்பட வேண்டும் அதன் பிறகுதான் தூர் எடுக்கும் பணிகள் செய்ய முடியும். தூர் அளவெடுக்கும் (Silt Survey) நடவடிக்கைகள் தல அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி அணை தூர்ந்துபோய், தண்ணீர் கொள்ளளவு குறைந்துள்ளது. அங்குள்ள அதிகாரிகள், விவசாயிகளிடம் பயிலா போட வேண்டுமென்று கூறினார்கள். ஆனால் விவசாயி கள் பயிலா போட்டும், 2 மாதங்களுக்குப் பிறகு சரிவர தண்ணீர் வராமல் அந்தப் பயிர்கள் எல்லாம் காய்ந்து விட்டது. எனவே, அரசு இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து, தூர் எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, இப்போது சர்வே செய்து தூர் எடுக்க வேண்டுமென்று பொதுவாக ஆணையிட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு தூர் எடுக்க வேண்டுமென்ற பணிகள் வருகின்ற போது, ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். டீ-சில்ட்டுக்கு அதிகமாக செலவாகின்றது. அதைவிட கரையின் அளவை சிறிது உயர்த்தி நீர்ப்பிடிப்புப் பகுதியின் பரப்பளவை, கொள்ளளவை அதிகப்படுத் தினால், போதுமான தண்ணீர் தேக்கிவைத்துக் கொள்ள முடியும். அதற்கு ஆகும் செலவு, தூர் எடுக்கும் செலவைவிட குறைவு. தண்ணீர் வீணாகாமல் பார்த்துக்கொள்வதில் இந்த அரசு கவனம் செலுத்தும்.

[முற்பகல் 9—50]

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத்தலைவரவர் களே, டீசில்ட் செய்ய அதிக செலவு ஆகுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கரையைப் பலப்படுத்தி னாலும் கூட டீசில்ட் எடுக்காததின் காரணமாக சென்ற ஆண்டு கூட அந்த அணை உடைந்து போய்விட்டது. ஆகவே மீண்டும் பரிசீலித்து தூர் எடுக்கும் பணி துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களேஅணைகரையை உயர்த்துவதினால் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் தூர் எடுப்பதைதவிர வேறு வழியில்லை. எவ்வளவு செலவானாலும் அதைச் செய்து

[1981 மார்ச் 30]

தான் ஆகவேண்டும். ஆகவே இரண்டிலே எது சாத்தியம் என்பதைப் பார்த்து அதில் ஏதாவது ஒன்றை செய்து நீர்ப் பிடிப்பினுடைய பரப்பளவு கொள்ளளவு முதலியவற்றை அதிகப் படுத்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

மொடக்குறிச்சி தொகுதியில் சர்க்கரை ஆலை.

* வினா எண். 558.—திரு ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சித் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைத்திட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, காலிங்கராயன், கீழ்பவானி ஆறுகள் பாய்கிற காரணத்தால் ஏராளமாக கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. அருகில் கரும்பு ஆலை இல்லாத காரணத்தால் கரும்பு எடுத்துச் செல்வதற்கு அதிகமான லாரி வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளின் இந்த துயரை நீக்குகிற வகையில் அங்கு மையமாக ஒரு இடத்தில் சர்க்கரை ஆலை ஒன்றை அமைத்திட இந்த ஆண்டாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற உத்தேசமில்லை.

சுப்புலாபுரம் கிராம கோபால்சாமி மலையில் மேற்கொண்ட ஆய்வு.

* வினா எண். 559— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கல்லுப் பட்டி பிர்க்கா, சுப்புலாபுரம் கிராமம் கோபால்சாமி மலையை "தமிழ்நாடு கனிம நிறுவனம்" ஆய்வு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி மலையில் கிடைக்கும் வெள்ளைக் கல் எதற்காக பயன்படுத்தப்படுகிறது.